அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

**அ.எண்** : 15 / 2018
**தேதி** : 25.01.2018

**பத்மவிபூஷன் விருது பெற்ற இளையராஜாவுக்கு வாழ்த்து**

1970களின் இறுதியில் தமிழ்த்திரை இசை உலகில் காலடி எடுத்து வைத்து, தனது தனித்துவமிக்க இசையமைப்பால் புதிய பாணியை அறிமுகப்படுத்தி தனக்கென ஒரு தனியிடத்தை உருவாக்கியிருக்கும், 'இசைஞானி' என்று அனைவராலும் புகழப்படும் இளையராஜா அவர்களுக்கு இந்த ஆண்டுக்கான பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியும், பெருமிதமும் அளிப்பதாக உள்ளது.

இளையராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் விருது ஒட்டுமொத்த தமிழினத்திற்கே பெருமையும், கௌரவமும் சேர்ப்பதாக உள்ளது.

பத்மவிபூஷண் விருது பெற்றிருக்கும் இளையராஜா அவர்களுக்கு என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும், உலகெங்கும் வாழும் தமிழர்களின் சார்பிலும் பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளையராஜா அவர்கள் நீண்ட ஆயுளோடும், ஆரோக்கியத்தோடும் கலைத் துறைக்குச் சேவை செய்து, மேலும் பல உயரிய விருதுகளைப் பெற வேண்டும் என்றும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பத்மபூஷண் விருது பெறும் சிறந்த கிரிக்கெட் வீரர் மகேந்திர சிங் தோனி, தமிழகத்தைச் சேர்ந்த தொல்லியல் துறை ஆய்வாளர் நாகசாமி, பத்மஸ்ரீ விருதுபெறும் மதுரை தியாகராஜர் கல்லூரி பேராசிரியர் ராஜகோபாலன் வாசுதேவன், கிராமியப்பாடல் இசைக்கலைஞர் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன், 98 வயது யோகா பயிற்சி நிபுணர் ஞானாம்பாள் உள்ளிட்ட பத்ம விருதுகள் பெறும் அனைவருக்கும் என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com